


உ
சிவமயம்

# பேரம்பல தரிசனம்

அமரர்
## தம்பிப்பிள்ளை பேரம்பலம்

அவர்களின் நெஞ்சம் நிறைந்த நினைவுகள் நீள
நினைவுப் பதிவு மலர்

22.08.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வேலணையைப் பிறப்பிடமாகவும்
திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த

# அமரர்
# தம்பிப்பிள்ளை பேரம்பலம்

(முன்னாள் துறைமுக அதிகாரசபை அதிகாரி)

# பேரம்பல தரிசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் தலைவனாக குல விளக்காய்

இல்லத்தின் கோயிலாக நல்லதொரு தந்தையாக

காவல் தெய்வமாக அன்போடும் பாசத்தோடும்

கண்ணியமாகப் பாதுகாத்து பொன், பொருள்,

செல்வம் எல்லாம் தேடி எங்களை நல்வழி நடாத்தி

வாழ்வாங்கு வாழ வைத்து இறைவனின்

நியதியின்படி விதியை முடித்து விண்ணேகித்

தெய்வமாகிவிட்ட எமது அன்புத் தெய்வத்தின்

பாதார விந்தங்களில் இந்நினைவு மலரைச்

சமர்ப்பிக்கின்றோம்.

அன்புடன்

– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்
26.12.1937

ஆண்டவன் மடியில்
23.07.2014

## அமரர்
# தம்பிப்பிள்ளை பேரம்பலம்

(முன்னாள் துறைமுக அதிகாரசபை அதிகாரி)

### "திதிவெண்பா"

ஜெய வருட ஆடித் திங்கள் ஏழாம் நாள்
அபரபட்ச துவாதசித் திதியில் உற்றாருக்கு
உறுபலம் தந்த பேரம்பலத்தார் - பார்விட்டு
பேரின்பப் பெருவாழ்வு பெற்றாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஓதவினை யகலும் ஓங்குபுகழ் பெருகும்
காதற் பொருளனைத்தும் கைகூடும் – சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்

## தேவாரம்

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருத்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமாமலையமர்ந் தாரே

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன் முன் னலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கராசய போற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை யெம்மாதீயென்றும்
ஆரூரா வென்றென்றே யலறாநில்லே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண் டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலும் ஆம்
அம்மையேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயற வில் லையே

## திருவாசகம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட் பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர் மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி!
அடல் விடைப்பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பின் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
யாரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன
இறப்பிலி யாவருக்கு மின்பமருந்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதலால்
மறப்பிலி மாயா விருத்தமு மாமே

## பெரிய புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கான நிலைப் பொருளோயே
ஐந்துகரத் தானை முகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமையும் செழுமையும் தந்த தலைவர்

மறைந்தும் மறையாத எமது குடும்பத் தலைவர் அமரர் பேரம்பலம் அவர்கள் இறைவனின் அருளாட்சியால் 23.07.2014 புதன்கிழமை இப்பூலோகக் கணக்கை முடித்துக்கொண்டு மண்ணுலக வாழ்வுக்கு விடைகூறிச் சென்றார். எங்கள் குடும்பத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த இவரது மனித மேம்பாட்டு விழுமியப் பண்புகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிறைந்து நிலைத்து நிற்கும் இவரிடம் காணப்பட்ட அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய வினை திறன்கள் எங்கள் மனமாகிய விளைபுலங்களில் விளைதிறன்களாக தளைத்துச் செழித்து வளரவும் பின்பற்றி இலட்சியமாக வளர்த்துக் கொள்ளவும் முயற்சிப்போமாக.

அமரர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வரன்முறை தவறாத சைவப் பாரம்பரியமும் உறுதியான குடும்பக் குலவொழுக்கமும் நெருக்கமான உறவுப் பிணைப்பும் புலமைமிக்க செந்தமிழர் ஒருங்கிணைந்த சந்ததியில் 1937ஆம் ஆண்டு விவசாயத்திலும் வியாபாரத்திலும் துறைசார்ந்த வல்லுநகராகிய தம்பிப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோருக்கு சிரேஷ்ட மகனாகப் பிறந்தார். கற்றவர்களும் ஒழுக்கசீலரும் பேரும் புகழும்மிக்க சான்றோர்கள், உறவினர் களாகவும், இரத்த உரித்துடைய சொந்தக்காரர்களாகவும் விளங்கிய நற்பண்பாட்டுச் சூழலில் வளர்ந்தமையால் எல்லார் சொல்லிலும் நல்லன ஏற்றுப் போற்றத்தக்க புகழுடையவராக ஏற்றம் பெற்றார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த பாடசாலைகளுக்கு நிகராக வேலணையூர் அறிவாலயமாக விளங்கிய சரஸ்வதி வித்தியாசாலையிலும் வேலணை மத்திய கல்லூரியிலும் கற்று கல்வியை நிறைவு செய்து பூரண ஆளுமை மிக்க மனிதனாக இளம் வயதிலேயே விளங்கியதால் உறவினர் அவரை நாடித் தேடிவந்து உதவிகளைப் பெற்றனர்.

தனது இருபத்திரண்டாவது வயதிலேயே திருகோணமலை துறைமுகக் கூட்டுத்தாபனத்திலே எழுதுவினைஞராக கடமையை ஆரம்பித்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியதால் அவர்மீது நன்மதிப்பு வளர்ந்ததை அறியக்கூடியதாக இருக்கின்றது. பதவி உயர்வுகள் பலநாடி வந்த போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழில் நாட்டங்கொள்ளாது, அடக்கமாக அவர் அரும்பணிகளை ஆற்றினார். இதனால் துறைமுக அதிகார சபையின் உள்நாட்டு அதிகாரிகளினதும் பன்னாட்டு கப்பல் அதிகாரிகளினதும் நட்பினைப் பெற்றதுடன் தனது அறிவையும் அனுபவத்தையும் பெருக்கி, எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி பெற்றார். தளராத மனமும் இடைவிடாத முயற்சியும் கொண்ட அமரர் அவர்கள் உழைப்பே நல்வாழ்வு நல்கும் என்பதை தான் சார்ந்த சந்ததியின ருக்குப் போதித்து சொல்லிலும் செயலிலும் எடுத்துக்காட்டி எம்மை நன்னி லைக்கு வழிப்படுத்தினார்.

இவரது, உண்மைத் தன்மையையும் நேர்மைத் திறனையும் நல்ல மனப்பாங்கையும் அறிந்த உறவினர்கள் கரம்பன் கிழக்கு முத்துக்குமாரு மகேஸ்வரி அவர்களின் மூத்த பெண்பிள்ளை அன்னலட்சுமி அவர்களை அருமைத் துணைவியாக கரம்பிடித்துக் கொடுத்தனர். துணைவியாரின் திறந்த உள்ளமும் சமயப் பணியும் விருந்து போற்றும் விழுமிய குணமும் சுற்றம் ஓம்பும் தூய்மையும் இன்சொல்லும் சிரித்த நன்முகமும் நிறைந்து கருத்தொருமித்த குடும்பம், ஒரு கதம்பமாக மிளிர்ந்து வந்தது. கணவரின் யோசனைகளை ஏற்று மனம் ஒன்றித்து வாழ்ந்து வந்ததன் தவப்பயனாக சுதாகரன் (சுதா) கனடா, மைதிலி (முன்னாள் சமுர்த்தி உத்தியோக முகாமையாளர் இலங்கை) (அவுஸ்ரேலியா), கிரிதரன் (கிரி) (டுபாய்) ஆகியோர் பிள்ளைகளாக, இவன் தந்தை எந்நோற்றான் கொல் என்னும் சொல் என்பதற்கேற்ப விளங்குகிறார்கள்.

தாய் தந்தை போலவே பிள்ளைகளும் விருந்து போற்றும் விழுமிய குணமும் சுற்றம் ஓம்பும் தூய்மையும் இன்சொல்லும் நன்முகமும் நிறைந்து விளங்குகின்றனர் இவர்களுக்கு தந்தையின் இழப்பு ஆறமுடியாத பேரிழப்பாகும். இதே போல இவரது மருமக்கள் திருமதி கிறிஸ்ரல் சுதாகரன் (Crystal Suthaharan) (கனடா), பொறியியலாளர் தி.சதீஸ்குமார் முன்னாள் உத்தியோகத்தர் R.D.A. இலங்கை. (அவுஸ்ரேலியா). திருமதி. தக்சலா கிரிதரன் (வடக்கு கிழக்கு மாகாணசபை முன்னாள் முகாமைத்துவ உதவியாளர்) ஆகியோரும் கத்தரின் (Kaitlyn), அஞ்சலி (Angely), டிரோன் (Tyrone) (கனடா) , கௌதம் (அவுஸ்ரேலியா), கிரித்தீஸ் (இலங்கை) ஆகிய பேரப்பிள்ளைகளும் இவரது இழப்பின் கையறு நிலையால் பல இடுக்கண்களைச் சுமந்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தன் ஏக சகோதரி வல்லவாம்பிகையிடம் அளவு கடந்த பாசமுடையவர். சகோதரியின் இழப்பு அமரர் அவர்களை திடுக்குற வைத்தது. இத்துன்ப நிகழ்ச்சியால் மனம் நொந்து வருந்தித் தவித்த வேளையிலும், மனம் தளராது தாய்க்கடுத்தது தாய்மாமன் என்பதற்கேற்ப அவரது பிள்ளைகளை ஆதரித்து இதயத்தால் அரவணைத்து தக்கவழி புகட்டி தன்பிள்ளைகளைப் போலவே நேசித்து வழிப்படுத்தியமையை உற்றார், உறவினர் அறிந்து வியந்து நெக்குருகின்றனர்.

அமரரின் தம்பி DR. அரசரெட்ணம் (மிருக வைத்தியர் முன்னாள் பிரதிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வட/கிழக்கு மாகாணசபை) அவர்களிடத்தும் அவரது குடும்பத்தினரிடத்தும் அளவு கடந்த பாசத்துடன் உளம் ஒன்றி எல்லா நலன்களும் மேலோங்க ஒருவருக்கொருவர் ஊன்றுகோலாக இருந்து ஒருயிரும் ஈருடலுமாக உறுதுணை புரிந்து வாழ்ந்தனர்.

பெரியோர் சிறியோர் எவர்களுடனும் அன்பாகக் கலந்துரையாடி மற்றவர்களுக்கு உதவி செய்வதில் முன்னோடியாக விளங்கியதால் பேரம்பலம் அண்ணன் என்றும் பேரம்பல மாமா என்றும் வாஞ்சையுடன் அழைத்து வந்தனர்.

இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை நினைக்கும் போதெல்லாம் உள்ளம் தத்தளிக்கின்றது. செய்வதறியாது சிந்தை தடுமாறுகிறது. அமரர் அவர்கள் அடிக்கடி கூறும் மணிமொழிகள் எங்கள் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அவர் சார்ந்த அடுத்த சந்ததியினர் அவரது எண்ணங்களையும் செயல்களையும் காவிச் செல்வதே அவருக்குச் செய்யும் கைங்கரியமாகும்.

இவரது ஆன்மா பிறவாப் பேரின்பத்தை அடைய இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்டத்தின் ஆலயங்களும் அமைவிடங்களும்

## திருகோணமலையில் குளக்கோட்டன் மன்னனுடன் தொடர்பானவை

### சிவன் கோயில்கள்

| ஆலயம் | அமைவிடம் |
| --- | --- |
| 1. திருக்கோணேஸ்வரம் | இயற்கை துறைமுகத்திற்கு சாதகமான மலை உச்சியில் அமைந்துள்ளது. (புகையிரத நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரம்) |
| 2. தம்பலகாமம் ஸ்ரீ ஆதிகோணேஸ்வர் ஆலயம் | திருகோணமலை பட்டினத்திலிருந்து கண்டி வீதியில் இருபத்தி நாலு கிலோ மீற்றர் தூரத்தில் பிரிகின்ற கிளைப் பாதையில் மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ளது. |
| 3. திருமங்கலாய் சிவன் கோயில் | கிளிவெட்டியிலிருந்து ஒன்பது கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. (இதில் நான்கு கிலோ மீற்றர் காட்டுப் பாதை) |
| 4. விஸ்வநாத சுவாமி (சிவன் கோயில்) (பண்டைய பெயர் செங்கற்பண்ணை) | சிவபுரியில் திருஞானசம்பந்தர் வீதியில் அமைந்துள்ளது. |
| 5. வெள்ளை வில்வபத்திரிக் கோணேசர் கோயில் | திருகோணமலை பட்டினத்தில் மின்சார வீதியில் அமைந்துள்ளது. |
| 6. கங்குவேலி சிவன் கோவில் | மூதூரிலிருந்து பதினாறு கிலோ மீற்றர் சென்று கிளி வெட்டியிலிருந்து ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் கங்கு வேலியில் அமைந்துள்ளது. (மகாவலி கங்கை எல்லை) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 7. அக்தியர் ஸ்தாபனம் சிவன் கோவில் (திருக்கரைசையம்பதி) | கிளிவெட்டியிலிருந்து பதினொரு கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். |
| 8. மல்லிகைத்தீவு சிவன் கோயில் | மூதூரிலிருந்து வெருகலம் பதிக்கு செல்லும் பாதையில் பிரிகின்ற கிளை வீதியில் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. |
| 9. கந்தளாய் சிவன் கோயில் போட்டங்காடு | கண்டி கொழும்புப் பாதையில் முப்பத்தொன்பது கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. |
| 10. சிவயோகபுரம் நடேசன் ஆலயம் கன்னியாய் | திருகோணமலையிலிருந்து அனுராதபுரம் செல்லும் பாதையில் ஆண்டான் குளத்தில் அமைந்துள்ளது. |

## அம்மன் ஆலயங்கள்

| | |
|---|---|
| 11. ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருகோணமலை | திருகோணமலை பட்டினத்திலில் டொக் கியாட் வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் பேருந்து நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. |
| 12. உப்பு வெளி காளி கோயில் | உப்புவெளி திருகோணமலை பட்டனத்திலிருந்து நாலரைக் கிலோ மீற்றர் தூரத்தில் நிலாவெளிக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. |
| 13. பறையன் குளம் எல்லைக் காளியம்மன் கோயில் | அனுராதபுரம் செல்லும் வீதியில் இருபத்தைந்து மைல் தூரத்தில் பிரியும் சிறு வீதியில் பத்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோ மீற்றர் சென்றால் நல்லபிட்டியா கிராமம் அங்கி ருந்து காட்டுப்பாதையில் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் மிக அழகான இயற்கைச் சூழலில் அமைந் துள்ளது.

14. சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலயம் — மூதூரிலிருந்து கட்டைப்பறிச் சான் கிராமம் சென்று அங்கி ருந்து ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

15. பாலம் பட்டாறு பத்தினி அம்மன் கோயில் — கொழும்பு கண்டி வீதியில் பதினாறு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

16. உவர்மலை கண்ணகி அம்மன் ஆலயம் — அரை மைல் தூரத்தில் உவர் மலைக் குன்றின் மீது அமைந் துள்ளது. கோணேச்சர் கோயிலை மிகத் தெளிவாகப் பார்க்கலாம்.

17. ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயில் — உவர்மலை கண்ணகிபுரம் / கோணேசபுரம்

18. மாரியம்மன் கோயில் — மடத்தடி புகையிரத நிலையத்தி லிருந்து அரைக் கிலோ மீற்றர்.

19. திருகோணமலை கும்பத்துமால் கருமாரியம்மன் — மாணிக்கவாசகர் வீதியில் அமைந்துள்ளது.

20. முத்துமாரியம்மன் கோயில் தம்பலகாமம் — தம்பலகாமம் ஆதிகோணேசர் கோயிலின் பாதையில் செல்ல லாம்.

21. முத்துமாரியம்மன் கோயில் — நிலாவெளி பதினாறு கிலோ மீற்றர் தூரத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 22. மாங்கிணாய் ஸ்ரீ மாரியம்மன் கோயில் | திருகோணமலைப் பட்டினத்திலிருந்து பத்து கிலோ மீற்றர் தூரத்தில் சாம்பல் தீவு அமைந்துள்ளது. |
| 23. சல்லி முத்துமாரியம்மன் கோவில் | சாம்பல் தீவிலிருந்து சல்லி வீதியூடாகக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. |
| 24. முத்துமாரியம்மன் கோவில், கிளிவெட்டி | திருகோணமலையிலிருந்து கடல் மார்க்கமாகவும் தரை வழியூடாகவும் செல்லலாம். |
| 25. செண்பக நாச்சியம்மன் கோவில் இலங்கைத் துறை | மூதூரிலிருந்து ஈச்சிலம்பத்தை கிராமத்தினூடாகச் சென்றால் இவ்வாலயத்தை அடையலாம். |

## விநாயகர் ஆலயங்கள்

| | |
|---|---|
| 26. ஆலடி விநாயகர் ஆலயம் | பிரசித்திபெற்ற ஸ்ரீ பத்திரகாளி அம்மனுடைய ஈசானத்தில் அமைந்துள்ளது. |
| 27. இரத்தின சிங்கப் பிள்ளையார் கோவில் | திருகோணமலை நகர் |
| 28. வீரகத்திப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக மடத்தடியில் அமைந்துள்ளது. |
| 29. சமாதுப் பிள்ளையார் கோவில் | திருகோணமலை பட்டினத்தில் பிரதான வீதியில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. |
| 30. மனையாவெளி திருச்சிற்றம்பல பிள்ளையார் கோவில் (இராசமலர் திருச்சிற்றம்பல பிள்ளையார் கோவில்) | திருகோணமலை புகையிரத நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் நீதிமன்ற வீதியில் அமைந்துள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 31. சின்னத் தொடுவாய் சித்திவிநாயகர் கோவில் | புகையிரத நிலையத்தின் சமீபமாக இருக்கிறது. |
| 32. பெரியதொடுவாய் பிள்ளையார் கோவில் | நிலாவெளிக்குச் செல்லும் நெடுஞ்சாலை உப்பு வெளிக் கிராமத்தில் அமைந்துள்ளது. |
| 33. கற்பகப் பிள்ளையார் கோவில் | திருக்கோணமலை திருஞான சம்பந்தர் வீதியில் அமைந் துள்ளது. |
| 34. தெய்வானைப்பிள்ளையார் கோவில் | திருகோணமலை ஹங்கிசன் வீதியில் அமைந்துள்ளது. |
| 35. பத்தாம் குறிஞ்சிக் கம்பனி பிள்ளையார் கோவில் | திருகோணமலை பட்டனம் |
| 36. பன்குளம் பிள்ளையார் கோவில் | திருகோணமலை அனுராதபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் இருபத்தி நான்கு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. |
| 37. பட்டித்திடல் ஸ்ரீ சித்திவிநாயகர் | மூதூரிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள பட்டித்திடல் அமைந்துள்ளது. |
| 38. உவமலை ஸ்ரீ விநாயகர் ஆலயம் | திருகோணமலையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. |
| 39. ஸ்ரீ தில்லையம்பல பிள்ளையார் கோவில் | திருகோணமலை அனுராதபுரம் அன்புவழிபுரத்தில் அமைந் துள்ளது. |
| 40. கட்டளைப் பிள்ளை கோவில் | கொழும்பு கண்டி வீதியிலிருந்து முப்பத்தொன்பது கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. அருள்மிகு விநாயகர் கோவில் ஆலங்கேணி

கிண்ணியாத்துறையிலிருந்து கடல் மார்க்கமாகவும் தம்பலகாமத்திலிருந்து தரை மார்க்கமாகவும் ஆலங்கேணியை அடையலாம்.

42. ஊற்றடிப்பிள்ளையார் கோவில் சின்னக்கிண்ணியா

திருகோணமலை பட்டனத்திலிருந்து பதினாறு கிலோ மீற்றர் தூரத்திற்குச் சென்று கிண்ணியா கடல் நீரினையை இயந்திரப் படகு மூலம் கடந்து செல்ல வேண்டும்.

43. சம்பூர் பிள்ளையார் கோவில்

மூதூர் சம்பூர் கிராமத்தில் அமைந்துள்ளது.

44. கூனித்தீவு பிள்ளையார் ஆலயம்

மூதூரிலிருந்து கெவுளியா வெளிச்சவீட்டுப் பாதை வழியாகச் சென்று இயற்கை எழில் நிறைந்த கூனித் தீவை அடையலாம்.

45. வர்ணகுலப் பிள்ளையார் கோவில் சேனையூர்

முத்துலிங்க சந்நியாசியாரின் அருள் வாக்குக்கேற்ப மருடிதச் சேனையில் அமைந்துள்ளது.

46. சித்தி விநாயகர் கோவில் மல்லிகைத் தீவு.

மல்லிகைத்தீவு சிவன்கோவிலிருந்து சிறுதூரத்தில் அமைந்துள்ளது.

47. இலிங்க நகர் கோண லிங்கப் பிள்ளையார் ஆலயம்

கண்டி வீதியில் இலிங்க நகர் சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் கிளைப் பாதையில் அமைந்துள்ளது.

48. வரத விநாயகர் கோவில் திரியாய்

திரியாய்க்க கிராமத்தில் யானோயாவுக்கும் புடைவைக் கட்டு ஆற்றுக்குமிடையே அழகிய இடத்தில் அமைந்துள்ளது.

49. தென்னை மரமாவடிப் பிள்ளையார் கோயில் (தென்னன் (பாண்டியன்) மரபு அடி)

திருகோணமலை பட்டனத்திலிருந்து எழுபத்தைந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. சித்தி விநாயகர் கோவில், நிலாவெளி.

திருகோணமலையிலிருந்து பதினாறு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

51. சாம்பல் தீவு வடலியம்பதி பிள்ளையார் கோவில்

திருகோணமலை பட்டினத்தில் இருந்து ஏழு கிலோ மீற்றர் சாம்பல் தீவு சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் கிளை வீதியில் அமைந்துள்ளது.

**முருகன் ஆலயம்**

52. வில்லூன்றிக் கந்த சுவாமி கோவில்

திருகோணமலை துறைமுகத்திற்குச் சமீபமாக கங்கா வீதிக் கருகாமையில் ஆலயம் அமைந்துள்ளது.

53. பாலமுருகன் ஆலயம் பாலையூற்று

திருகோணமலைப் பட்டினத்திலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் அனுராதபுரச் சந்தியிலிருந்து தெற்குப் பக்கம் கிளைப் பாதையில் அமைந்துள்ளது.

54. முத்துக் குமாரசுவாமி கோவில்

பட்டினத்தின் திருஞானசம்பந்தர் வீதியில் இருக்கிறது.

55. வெருகலப்பதி சித்தி வேலாயுத சுவாமி கோவில்

திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்குமிடையில் எல்லைக் கோயிலாக அமைந்துள்ளது. வெருகல் ஆறு இருமாவட்டங்களையும் பிரித்து ஓடிக் கொண்டிருக்கிறது.

56. ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்

திருக்கோணமலை பட்டினத்தில் புகையிரத நிலையத்திற்கு சமீபமாக அமைந்துள்ளது.

57. சனிஸ்வரன் கோயில்

திருகோணமலையின் புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக மடத்தடியில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியைகள்

ஒருவர் இறந்தபின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகளாற் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள். அபரம் - பிந்தியது எனப் பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை. தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும்போதும், இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும்.

இல்லறத்தார்க்குரிய ஐவகைக் கடமைகளிற் பிதிர்க்கடன் முக்கியமான தாலேயே திருவள்ளுவர் அதனை 'தென்புலத்தார்' என முதலிற் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும், சித்திகளும் பெறுவர். இறை அருளுக்கு ஆளாவார்கள். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரம் தவறியவராவார். பிதிர் வருந்தின் பெருந்தீமை நேரும்.

இந்துமத நூல்கள் ஐந்து விதமான கடமைகளை (தர்மங்களை) இல்லற நிலையில் ஆற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றன.

| | | |
|---|---|---|
| 1. தேவ யக்ஞும் | - | இறைவனுக்குச் செய்யும் பூசை |
| 2. ரிஷி யக்ஞும் | - | சாத்திரங்களைக் கற்பித்தல் |
| 3. பிதிரு யக்ஞும் | - | முன்னோருக்குத் தர்ப்பணம் முதலான காரியங்களைச் செய்தல் |
| 4. நர யக்ஞும் | - | பிறமனிதருக்குத் தொண்டு செய்தல் |
| 5. பூத யக்ஞும் | - | பிற உயிர்களுக்கு உதவுதல் |

**அபரக் கிரியைகள் வகை :**

இவை தகனக் கிரியை, அத்திசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிரார்த்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவைகள் உத்தரக் கிரியை, சிரார்த்தக் கிரியை எனவும் அழைக்கப்படும்.

**மரணக் கிரியைகள்**

தகனக் கிரியையில் மூன்று பகுதிகளுண்டு. அவையாவன பேரிகை யடித்தல், உடற்சுத்தி, ஆன்மசுத்தி என்பனவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரிகையடித்தல்**

ஆசாரியார் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்தி பண்ணி, மேளத்திலே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும்போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள், "இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும். உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கின்றேன், சிவபெருமான் இதனை இரட்சிப்பாராக" என்பதாகும்.

(இன்று ஆசாரியார் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கின்றார்)

**உடற்சுத்தி**

சிவாச்சாரியார் பந்தலின் நடுவிற் சிவகும்பமும், உருத்திர கும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர்.

எண்ணெய், பஞ்சகௌவியம், இளநீர், மஞ்சள் நீர், சிவகும்பநீர் ஆகியவற்றில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்திசெய்து, புத்தாடை புனைந்து நீறுசாத்திப் பூச்சூடித் தர்ப்பையில் வைப்பர்.

சிவாச்சாரியார் பஞ்சசுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து அக்னி வளர்த்து, அட்டதிக்குத் தேவர்களையும் சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவார். கும்பத்திலிருந்து சிவனை உடலின் மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வர். இருதயத்தில் ஆசன பூசை செய்து ஆன்மாவை அதில் அமைத்து, அதில் மந்திரங்களைப் பதித்து, அதன் இருதயத்திற் சிவனை ஆவாகனம் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியார் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களைத் தீர்க்க ஆகுதி செய்து, அவ்வுடலுக்கும் தனக்கும் நாடி சந்தானம் செய்து அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்டு வந்து, உருத்திரனைத் தியானித்துப் பூரணாகுதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

**சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்**

பாவங்களை நீக்குவதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகிறது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்காக இறந்தவர்களின் பேரப் பிள்ளைகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் நெய்ப்பந்தம் பிடிக்கப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப்படும்.

**சுடலைச் சேர்தல்**

உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும்போது அட்டதிக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவாசாரமுள்ள ஒருவரே இதனைச் செய்யத்தக்கவராவர்) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும் கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நாலு முழ நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்குமிடம் சிதாதானம் (தகனம் செய்யுமிடம்) என்று பெயர் பெறும். இச்சிதையில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன்மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர். (இதனை வாய்க்கரிசி போடுதல் எனக் கூறுவர்)

**தீயிடல்**

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்ப நீரை உடலுக்குத் தெளித்து குடத்தை முன்பாக நிலத்திற் போட்டுச் சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச்செய்வர். தீ இடும்பொழுது "அக்கினி தேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரதாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்" என நினைத்துக் கொண்டே தீயிட வேண்டும்.

**அத்திசஞ்சயனம் (காடாற்றுதல்)**

அத்திசஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிருந்து எலும்புகளையும், சாம்பரையும் எடுத்துப் புண்ணிய நீரிற் சேர்த்தலாகும். அத்தி, எலும்பு, சஞ்சயனம் - கரைத்தல், இது கால், கொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலுடன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக்கொண்டு புண்ணிய நீரிற் சேர்த்து வழிபாடு செய்தலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதனால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவெயாம். முதலைந்து நாட்களிலொன்றிலேனும், ஏழாம் நாளிலேனும் இது செய்யத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நக்ன தானம்**

இது தகனக் கிரியை முடித்த பின் இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டுக் குடும்பத்தாரால் ஆச்சாரியருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைக் கொடுத்தலாகும்.

**அந்தியேட்டி (துடக்கு)**

இது ஆசௌசக் கடைசியிற் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்திய - கடைசி நாள்; இட்டி - யாகம்; இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய தீர்த்தக்கரையில் நிகழும் கிரியை இதுவாகும். இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர். இது முப்தோராம் நாள் நடப்பது என நடைமுறையில் இருந்து வருகிறது.

**பாடாண பூசை (பாஷாண பூசை)**

ஒரு கல்லை வைத்து இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப் பூசையினாலும் இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகிறது. பூசையினால் அதற்குத் திருப்தியும், கிரியைகளினால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும்.

**ஏகோதிட்டம்**

ஆசௌசம் நீக்கிய அடுத்தநாள் இறந்தவருடைய ஆன்ம சுத்திக்காக வும், நற்கதியடையும் பொருட்டும் செய்யப்படும் கிரியை. இக் கிரியையில் இருக்கும் ஆச்சாரியரை இறந்த ஆளாகப் பாவனை செய்து அவருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமானவளவு பொருட்களைத் தானமாகக் கொடுத்து, ஒரு வருடம் முடியும் வரை எதிர்ப்படாமலிருக்கச் செய்தல். தானமாகக் கொடுக்கப்பட வேண்டிய பொருட்கள் உணவுப் பொருட்கள், உடை, திருநீற்றுப் பை, செபமாலை, குடை, மிதியடி, பொன் முதலியனவாகும்.

**சபிண்டீகரணம்**

ஏகோதிட்டத்திற்கு அடுத்த நாளிலே பிதிர்த்தேவர்களோடு இறந்தவரைச் சேர்த்தற்கு நடைபெறும் கிரியை சபிண்டீகரணத்தினால் ஆன்ம சுத்தி பெற்றுச் சிவலோகஞ் சேரும். இக் கிரியை பிண்மிட்டுச் செய்வதனால் இது சபிண்டீகரணம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிண்டத்திற்குரிய பொருட்கள்**

அரிசி, எள், உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை ஆகியனவாம். பிதிரருக்குச் செய்யும் இக்கிரியையைப் பிதிர்த் தேவர்கள் பெற்று, இறந்தவர்களுக்கும் அவரது தலைமுறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிரர்களைப் படைத்துள்ளார்.

இதுவரை ஆன்ம ஈடேற்றம் பெற்று ஆன்மாவுக்குச் செய்யப்படும் கிரியைகள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றீர்கள். ஆன்மாவின் சுத்திக்காக வருடந்தோறும் செய்யப்படும் கிரியை சிரார்த்தம் எனப்படும். இதுபற்றி வருந்தொடரில் அறிவீர்கள்.

## சிரார்த்தம் - (திவசம்)

**சிரார்த்தம்**

சிரத்தையோடு செய்யப்படுவது சிரார்த்தம் எனப்படும். சிரத்தையானது பற்று, அன்பு எனப் பொருள்படும். இறந்தவர்களின் சந்ததியினராலேதான் இக்கிரியை செய்யப்பட வேண்டும்.

சிரார்த்தம் பிதிர்க்கருமம் என்னும் பொருள் உடையதாய் எல்லாப் பிதிர்க் கருமங்களையும் குறிப்பது. இது ஆட்டைத் திவசம், திவசம், திதி எனவும் வழங்கும்.

**ஆட்டைத் திவசம்**

ஒருவர் இறந்த ஒரு ஆண்டின் பின் செய்யும் சிரார்த்தம் ஆப்திகம் அல்லது ஆட்டைத் திவசம் எனவும், அதனையடுத்து ஆண்டுதோறும் அதே திதியிற் செய்யப்படும் கிரியை வருட சிரார்த்தம் அல்லது திவசம் எனவும் கூறப்படும்.

**நைமித்திக சிரார்த்தம்**

பிதா, மாதா முதலாயினோர் இறந்த மாதமும் திதியும் வருடந்தோறும் வரும்பொழுது விசுவாசத்தோடு, விதிப்படி செய்வது நைமித்திக சிரார்த்தம் எனப்படும். எத்திதியில் இறந்தாரோ, அத்திதியிற் சிரார்த்தம் செய்வது உத்தமமாம். திதி தெரியாவிடில் அந்த மாச அமாவாசை அல்லது அட்டமியற் செய்யலாம். மாசம் தெரியாவிடின் ஆடி, மாசி, புரட்டாதி மாதங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திதிகளிற் செய்யலாம். இவைகளில் எதுவும் தெரியாதோர் புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபட்ச நாட்களிற் செய்து கொள்ளலாம்.(புரட்டாதி மாதத்து அபரபக்கத்துப் பிரதமமை முதல், அமாவாசை வரையான காலம் மாயளயபட்சக் காலம்)

**தீர்த்த சிரார்த்தம்**

மாதந்தோறும் அமாவாசையிற் பிதாமாதாக்களின் பொருட்டுச் செய்யப்படும் பிதிர்த் தேவர்களின் தாகசாந்திக் கருமம் .

அமாவாசை, சூரிய கிரகணம், சந்திரகிரகணம், விதிபாதயோகம், உத்தராயணம், சித்திரை வருடப் பிறப்பு, மாதப்பிறப்பு, கார்த்திகை மாத வளர்பிறை நவமி, புரட்டாதி மாதத் தேய்பிறை திரியோதசி என்னும் இந்நாட்களிற் புண்ணிய தீர்த்தத்தில் நீராடிப் பிதிர்த் தருப்பணஞ் செய்து சிவனடியாரோடு உண்ணல் தீர்த்த சிரார்த்தம் எனப்படும்.

நீராடுபவர்களுடைய பாவங்களை நீக்கி, அவர்களுக்கு வீடுபேறு கொடுப்பதற்காகவும், புண்ணிய காலங்களிலே தென்புலத்தாரைக் குறித்துத் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களைப் பிறிவிக்கடலினின்றும் கரையேற்றுவதற்காகவும் சிவபெருமான் தமது வடிவையே தீர்த்த வடிவமாக்கியுள்ளார்.

**அமாவாசை சிரார்த்தம்**

மனிதர்களுடைய ஒரு மாசம் பிதிர்களுக்கு ஒரு நாளாம். (சுக்கிலபக்கம் இரவும், கிருஷ்ணபக்கம் பகலுமாம்) ஆதலால் மாதந்தோறும் வரும் அமாவாவையில் தருப்பணம் செய்து விரதம் அனுட்டிக்க வேண்டும்.

**எள்ளும் தண்ணீரும் இறைத்தல்**

தர்ப்பணம் பிதிர்களின் திருப்திக்காகச் செய்யப்படுவது. தர்ப்பையைக் குறுக்காகப் பிடித்து அத் தர்ப்பை மூலத்திலிருந்து எள்ளுக் கலந்த நீரைச் சுட்டுவிரல் மூலம் விழச் செய்யப்படுவது. இவ்வேளையில் தலைமுறையான பிதிர்கள் பெயர்கள் சொல்லப்படும். தர்ப்பண முடிவிலே "என் குலப் பிதிர்களே பூமியில் விடப்பட்ட இந்த நீரினால் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்" என்று சொல்லித் தர்ப்பை எள்ளுடன் தீர்த்தத்திற் போடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கயா சிரார்த்தம் (காசியில் செய்யப்படும் சிரார்த்தம்)**

கயா காசியிலுள்ள தீர்த்தம். இதில் பிதிர்களை எண்ணிச் சிரார்த்தம் செய்யின் வேறு சிரார்த்தம் செய்ய வேண்டியதில்லை என ஞான நூல்கள் கூறும். இச்சிரார்த்தம் பிதிர்களுக்குத் திருப்தியைக் கொடுப்பதுடன், போகமோட்சங் களையும் கொடுக்கும். கயா சிரார்த்தத்தால் ஏழு கோத்திரத்திலுள்ள நூற்றொரு குலமும் விருத்தியாகும். இப்படியான வேறும் பல புண்ணிய தீர்த்தங்கள் சிரார்த்தம் செய்வதற்கு உண்டு. அவை அயோத்தி, மதுரை, காஞ்சி, அவந்தி, துவாரகை, திருக்கேதீச்சரம், திருகோணமலை கன்னியா நீருற்றுக்கள், கீரிமலை, முன்னேஸ்வரம் போன்றவையாகும்.

**சிரார்த்தம் செய்யும் இடம்**

இறந்தவர் வீடு, திருநந்தவனம், மலை, திருக்கோயில், புண்ணிய தீர்த்தக்கரை, குரவின் மனை போன்ற கோமயத்தினாற் சுத்தி செய்யப்பட்ட இடங்கள் சிறப்பானவை.

**சிரார்த்தத்துக்கு உரிய பொருட்கள்**

**தானிய வகை** :- எள், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து

**பழ வகை :** வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாப்பழம்

**காய்கறி வகை:** வாழைக்காய், பலாக்காய், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, இஞ்சிக் கிழங்கு, வாழைத்தண்டு.

**அபிஷேகப் பொருட்கள்** : சர்க்கரை, தேன், பசு நெய், பசுப்பால், பசுந்தயிர், எண்ணெய், மஞ்சள், இளநீர்.

**மங்கலப் பொருட்கள்** : வாழையிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு

**ஏனைய பொருட்கள்** : கராம்பு, சாதிக்காய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம் முதலியன.

**சிரார்த்தத்துக்கு ஆகாத பொருட்கள்**

கடலை, பீர்க்கங்காய், பூசனிக்காய், முருங்கை, கத்தரிக்காய், அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூடு, கொவ்வை, எருமைப்பால், எருமைத் தயிர் முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருள் இல்லாதவர் சிரார்த்தம்**

சிரார்த்தத்திற்குப் பொருள் இல்லாதவர் காய், கனி, கிழங்கு, எள்ளு இவைகளையேனும் பிராமணருக்குக் கொடுத்துப் பிரதட்சண நமஸ்காரஞ் செய்யலாம். இதுவும் செய்வதற்கு வசதி இல்லாதிருப்பின் பசுக் கூட்டங்களுக்குப் புல் கொடுத்தல் மேலாம்.

**சிரார்த்தத்திற்கு உபயோகமாகும் பத்திரம் மலர்**

துளிசி, வில்வம், தாமரை, செண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

**சிரார்த்தத்திற்கு ஆகாத மலர்கள்**

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப் பூ, சிறுசண்முகப் பூ முதலியன.

**சிரார்த்த தினத்திலே செய்யத்தக்க புண்ணிய காரியங்கள்**

அன்ன தானம், ஆடை வகை முதலியன வழங்கலும், திருக்கோவிலே கடவுளுக்கு அபிடேகம், பூசை, நெய் விளக்கேற்றல் முதலியனவுமாம்.

**சிரார்த்தத் தினத்திலே செய்யத்தகாதன**

தயிர் கடைதல், நெற் குத்துதல், நெய் முதலிய பொருட்கள் கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னதானத்தை மிதித்தல்.

**சிரார்த்தம் கொடுக்கத் தக்க பாத்திரர்**

இறந்தவர் பெற்ற தீட்சைக்குச் சமானமான தீட்சை பெற்றோருக்கு அல்லது அதனின் மேலான தீட்சையேனும் பெற்ற சற்பாத்திரங்களுக்குச் சிரார்த்தங் கொடுக்கலாம்.

**சிரார்த்தம் நடைபெறும்போது செய்யத்தக்கன**

வேத பாராயணஞ் செய்தல், தமிழ் வேதங்களையும், புராணங்களையும் ஓததல். இவை பிதிர்களுக்கு மிகத் திருப்தியானவையாம்.

**உபசாரம் :**

சிரார்த்த முடிவில் ஆச்சாரியாருக்கு உபசாரஞ் செய்து அவரை வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரஞ் செய்யும்போது அஃது ஆச்சாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது. பிதிர்த் தேவர்களுக்கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.

**சிரார்த்த காலம்**

இராக் காலத்திலும், சூரியயோதயம் முதல் ஆறு நாழிகை வரையுள்ள காலைப் பொழுதிலும், இராக் காலத்தின் இறுதி மூர்த்தமாகிய இரண்டு நாழிகையும் பகற் காலத்தின் இறுதி மூர்த்தமாகிய இரண்டாம் சந்தியகாலமும் தவிர்ந்த ஏனைய நேரங்கள் பிதிர் சிரார்த்தத்திற்கு உரியனவாம்.

**உணவு**

சிரார்த்தங்களில் அதிதிகளுக்கு அன்னம் கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரம சிவனும், பார்வதி அம்மையும், முரகக் கடவுளும், திருமாலும், பிரம்மாவும், தரும தேவதைகளுமாகிய சகலரும் கூடி அதிதி வடிவமாய் வருவரென்று மெய்ந் நூல்கள் கூறுகின்றன.

நாம் இவ்வுலகில் வாழ்கின்றோம் எம் தாய் எம்மைப் பெற்றார்கள் என்று சொல்லக் கேட்கின்றோம். இவ்வுலகுக்கு எப்படி வந்தோம் என்று வேறு எவ்வகையாலும் நாம் அறிய முடிவதில்லை. அவ்வாறே நாமும் ஒருநாள் இறப்போம் என்பதை உய்த்துணர்கின்றோம். ஆனால் நாம் எப்போது இறப்போம் இறந்த பின் எமது நிலை என்னவாகும் என்று எம்மால் அறிய முடிவதில்லை. இதனாலேயே "வந்தவாறெங்கனே போமாறேதோ மாயமாம்" என அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார்.

நாம் செய்கின்ற செயலும், தானமும் தர்மமும்தான் எம்முடன் நிழல்போல் வரும். காதற்ற ஊசி கூட எம்முடன் வரமாட்டாது. எனவே நாம் வாழ்க்கையை வாழும்பொழுது எந்நெறியைக் கடைப்பிடித்து எங்ஙனம் வாழுதல் வேண்டும் என்பதனை எமது சமய தத்துவங்கள் கூறியுள்ளன. அடியார்கள் மகான்கள் அங்ஙனமே வாழ்ந்து காட்டியுள்ளார்கள். எனவே உரிய காலத்திற் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தல் எமது தலயாய பணியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி

ஆன்றோர் எமக்களித்த இவ்வாசனங்களை உங்கள் வசதிக்கேற்றவாறு காலை, மாலை நெறி தவறாது பயிற்சி செய்து வந்தால் உங்களமும் உடலும் தூய்மையடைந்து நல் ஆரோக்கியவாழ்வைப் பெறுவீர்கள்.

## பத்மாசனம்



முதலாவது பத்மாசனம் இதைச் செய்யும் விதம் சமமான தரையில் நீளமான விரிப்பை விரித்து அதில் இருந்து கால்களை நீட்டி வலது காலை மடக்கி இடது தொடையின் மேல் குதிக்கால் அடி வயிற்றில் பட வைக்க வேண்டும். இரண்டாது இடது காலை மடக்கி வலது துடையின் மேல் வைத்து நிமிர்ந்து அழகாக இருத்தல் வேண்டும்.

கண்களை மூடி தியானத்தில் இருக்கும்போது நெற்றிப்புருவ மத்தியை மனக்கண்ணால் பார்த்து மனதை அடக்கி வேறெங்கும் செல்லாமல் பாதுகாக்க வேண்டும். ஆசனம் செய்யும்போது மூச்சை உள்ளிளுக்கும் போது ஓம் என்றும் வெளியில் சுவாசம் விடும்போது ஒனறு என்றும் கணக்குப்போட்டு நிமிடம் பதினைந்து, எண்ண வேண்டும். இப்படி பத்மாசனம் ஒரு நிமிடம் முதல் ஐந்து நிமிடம் வரை இருக்கலாம் ; பத்து நிமிடம் வரையிலேனும் இருக்கலாம்.

**பத்மாசனத்தின் நன்மைகள் :** சுவாசப்பையை நேராக இருக்கவைக்கிறது. அதிகமான பிராண வாயுவை உள்ளே இருக்க இடம் எடுக்கிறது. முதுகு எலும்புகள் வலுப்பெறுகின்றன. இரத்த நரம்புகள் துரிதமாக வேலை செய்கின்றன. நல்ல ஞாபகசக்தியையும் ஏற்படுத்துகிறது. முதுகு எலும்புக்குள் இருக்கும் வெள்ளை நரம்பு வலுவடைகிறது.
ஆயளைக் கூட்டுகிறது.

## வச்சிராசனம்



அடுத்தபடியாக வச்சிராசனம் செய்யும் விதம் விரிப்பில் இருந்து கால்களை பின்னால் மடக்கி பிருஸ்ட பக்கமாக இடுப்புக் குக் கீழ்ப்பகுதியில் இருக்க வேண்டும். படத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியபடி இருக்கவும் உடம்பு மேற்பகுதி நிமிர்த்தி இருக்க வேண்டும்.

**வச்சிராசனத்தின் பலன்கள் :**

இந்த வச்சிராசனத்தால் அநேனக நன்மைகள் உண்டு. இவ்வாசனத்தை வயிற்றில் அஜீரணம் இருக்காது. குதிவாதம், முட்டிவாதம் வராமல் தடுக்கும். பத்மாசனம் போட வராதவர்கள் வச்சிராசனம் போட்டுப் பயனடையலாம்.

## பச்சிமோத்தாசனம்



மல்லாந்து படுத்துக் கால்களை அணைத்துக் கொண்டு கைகளை இருபக்கங்களாலும் உள்ளங்கைகள் நிலத்தில் படிந்து இருக்க பச்சிமோத்தாசனனத்தைப் படத்தில் காட்டியபடி படுத்திருந்து கைகள் இரண்டும் தலைக்குப் பின்னால் நீட்டியபடி படுத்திருந்து சுவாசத்தை உள்ளிளுத்தவாறு கைகளை காதுகள் ஓரமாக அணைத்துத் தலை, உடம்பு கைகளை ஒருமித்து எழும்பிச் சுவாசத்தை வெளியே விட்டபடி முன் குனிந்து கைகளால் கால் பெருவிரல்களைப் பிடித்து 4 சுவாசம் உள் இழுத்து வெளிவிட்டுத் திரும்பவும் கைகளைக் காது ஓரமாக அணைத்தபடி பின்நோக்கி நிலத்தில் படுக்க வேண்டும். இரண்டு சுவாசம் ஓய்வெடுத்துத் திரும்பவும், சுவாசத்தை உள்ளிளுத்துக் கைகளையும் உடலையும் தூக்கிக் குனிந்து கால் பெருவிரல்களைப் பிடித்தவண்ணம் முழங்கைகள் நிலத்தில் பட முகம் முழங்கால்களைத் தொட்டுக் கொண்டு 4 மூச்சுகள் விடவேண்டும். பச்சிமோத்தாசனத்தைப் படத்தில் காட்டியவாறு செய்து பின்னோக்கி வரவேண்டும். இதேமாதிரியாக 5 தடவைகள் செய்ய வேண்டும். பின்பு ஓய்வு எடுக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பச்சிமோத்தாசனத்தின் பலன்கள் :**

ஆண்களைவிட பெண்களுக்கு முக்கியமான மருந்தாகும். கர்பப்பை சுத்திகரிக்கப்படுகிறது. நீரிழிவு நோய் வராமல் தடுக்கப்படுகிறது. மாதவிடாய் காலத்தில் வரும் இடுப்புவலி, வயிற்றுவலி முதலிய நோய்கள் வராமல் தடுக்கும் சக்தி உடையது. பொறுமையுடன் செய்து வந்தால் மலட்டுத் தன்மை நீங்கிப் பிள்ளைப்பேறு உண்டாகும். இளம் தொந்தி, பெருந்தொந்தி, ஊளைச்சதைகள் கரைந்துவிடும். இடுப்பை இறுக்கச் செய்து, அழகைத் தரும். அரும் பெரும் மருந்து பச்சிமோத்தாசனம் மூலவியாதியை வராமல் தடுக்கும்.

## மயூராசனம்



முழங்கால்களை மடித்து, குதிக்கால் களில் இருக்கவும், முழங்கால்கள் இரண்டும் ஒன்று டன் ஒன்று அணைந்து, முழங் காலுக்கு மத்தியில் கைவிரல்கள் பிறங்கால்களை பார்த்தபடி, நிலத் தில் வைத்து முழங்கைகளை மடித்து தொப்புளில் வைத்து முன்குனிந்து முழங்கை யில் படுத்துக்கொண்டு கால்கள் இரண்டையும் பின்புறம் நீட்டி முழங்கை யிரண்டும் தொப்பிளில் வைத்து, உடம்பைத் தாங்கியவண்ணம் முன்பக்கம் அட்டைபோல் நகர பின்கால் நிலத்தில் இருந்து மேல் தூக்கப்படும் நிலை மயூராசனம் எனப்படும். இது படத்தில் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் இருந்து கொண்டு 4 சுவாசம் உள்வெளி இழுத்துவிட்டுக் கொண்டு 4வது சுவாசத்தை இழுத்துக்கொண்டு ஆரம்பநிலைக்கு வர வேண்டும். இவ்வாசனம் நான்கு ஐந்து தடவைகள் செய்யலாம்.

**மயூராசனத்தின் பலன்கள் :**


ஏறுகுடல், குறுக்குக்குடல், இறங்கு குடல், சிறுகுடல் இவைகளின் வேலைகளைச் சரிவரச் செய்கிறது. மலச்சிக்கல்கள் உண்டாகதபடி தடை செய்கிறது. அஜீரணம், வாயு முதலிய தொல்லைகள் நீங்குகின்றன. மணிக்கட்டும் முன்கைச்சதையும் வலிமையடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகமுத்ரா


விரிப்பில் பத்மாசனம் போட்டு நிமிர்ந்து இருக்கவும். பின் யோகமுத்ராவின் படத்தைப் பார்க்கவும். கைகளால் இரு குதிக்கால்களையும் பிடித்துக்கொண்டு



சுவாசத்தை வெளிவிட்டபடி நிலைத்தில் முகம் தொட வேண்டும். 3 முறை 10 வினாடிகள் சுவாசம் உள்வெளி இழுத்தபடி நின்று, பின் நிலத்தை விட்டு மேல் எழுந்து சுவாசத்தை இழுத்தபடி ஆரம்ப நிலைக்கு வரவும். இதேபோல் ஐந்து தடவை செய்ய வேண்டும்.

**யோகமுத்ராவின் பலன்கள் :** முன் குனிவதால் முதுகெலும்பு பலன் பெறுகிறது. அதைத் தொட்ட நரம்புகளும் விரிவடைகிறது. கல்லீரல், மண்ணீரல், பங்கி ரியாஸ், பித்தப்பை, சிறுகுடல், இரப்பை பெருங்குடல் நசுக்கப்பட்டு அழுக்குகள் வெளியாகிச் சுத்தமடைந்து பலமடைகிறது. மலச்சிக்கல் போகிறது. குடல்வளரி நசுக்கப்பட்டு வெளியாகி அப்பன்டிஸ் வராமல் பாதுகாக்கின்றது.

# பாதஹஸ்தாசனம்



இரண்டு கால்களையும் ஒரு அடி இடை விரித்து நிமிர்ந்து நின்று கைகளை தலைக்குமேல் இரு காதுகளின் ஓரமாக நீட்டி சுவாசத்தை வெளிவிட்டபடி குனிந்து கைகளால் கால் பெரு விரலைப் பிடிக்க வேண்டும். முழங்கால்கள் மடங்கக்கூடாது. நான்கு சுவாசம் இழுத்துவிட்டபடி நின்று பின் சுவாசத்தை இழுத்துக்கொண்டு மேல் எழுந்து நிமிர்ந்து நிற்க வேண்டும். பாத ஹஸ்தனத்தின் படத்தைப் பார்க்கவும். இரண்டு தடவைகள் செய்தபின் மூன்றாவது தடவை முகம் முழங் காலைத் தொட வேண்டும். முழங்கால் பின் மடங்கக் கூடாது. நிமிர்ந்து ஓய்வெடுக்க வேண்டும்.

**பாதஹஸ்தாசனம் பலன்கள் :**


தலைகீழ் குனிவதால் தலைக்கு இரத்தம் பாயும். 18 வயதுக்குக் படும். கல்லீரல் மண்ணீரலுக்குப் பயிற்சி உண்டாகிறது. முதுகெலும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்ப்பட்டவர்கள் இந்த ஆசனம் செய்வதால் சிரசாசனத்தின் பலன் கிட்டும். கால்கள் பலம் பெறும். முகம் அழகடையும். இரைப்பைக்குப் பயிற்சி ஏற்படும். கல்லீரல் மண்ணீரலுக்குப் பயிற்சி உண்டாகிறது. முதுகெலும்பு வளைவதால் நரம்புக் கூட்டங்கள் பலன்பெறும். வயிற்றில் கொழுப்பு சேராது. நோயே வராது. அரும்பெரும் மருந்து பாதஹஸ்தாசனம்.

## சாந்தியாசனம்



சாந்தியாசனம் மிக முக்கியமானது. மனம் ஓர் நிலையடையும் விரிப்பில் நிமிர்ந்து படுத்துக்கொண்டு சரீரத்தைத் தளர்த்திவிட வேண்டும். உயிரற்ற உறுப்புக்கள் மாதிரி வைக்கவும். பின் ஒவ்வொரு உறுப்புக்களையும் மனதினால் நினைத்து அந்த உறுப்புக்களோடு பேச வேண்டும். வாய் திறக்கக் கூடாது. மூக்கினால் சுவாசிக்க வேண்டும். ஒவ்வொரு உறுப்புக்களையும் நினைத்து விரல்களே உங்கள் வேலைகளைச் சரிவரச் செய்து நீங்கள் ஆரோக்கியமடை வீர்களாக. ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

சிறுகுடல், இரைப்பை, சிறுநீரகம், பித்தப்பை, கல்லீரல், மண்ணீரல், இருதயம், சுவாசப்பை இவைகளை மேல் சொன்னது போல் சொல்லி கைகள், புஜங்கள், கழுத்து, முறடு, நாடி, வாய், மூக்கு, காதுகள், கண்கள், மூளை, தலை இவைகளைத் தனித்தனியே சொல்லி ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று சொல்லுதல் வேண்டும். மனம் ஒரு நிலை அடையும்.

**ஆசனங்கள் செய்து முடிவில் சாந்தி ஆசனம்**
**மிக மிக முக்கியமானதாகும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Laugh and the world ....

Laugh and the world laughs with you,
Weep and you weep alone:
For this brave old earth must borrow its mirth,
It has sorrow enough of its own.
Sing and hills will answer,
Sigh! It is lost in the air.
The echoes do bound a joyful sound,
But shrink from voicing care.
Rejoice the man will seek you,
Grieve and they turn and go:
They want full measure of all your pleasure,
But they do not want your woe.
Be glad and your friends are many,
Be sad and you lose them all.
There is none to decline your nectared wine,
But alone you must drink life's gall.
Feast, and your halls are crowded;
Fast, and the world goes by;
Succeed and give, and it helps you live,
But no one can help you die.
There is room in the halls of pleasure
For a long and lordly train,
But one by one we must all file on
Through the narrow aisles of pain.

-Ella Wheeler Wilcox-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்துருகும் நன்றி



எளிமையும் செழுமையும் தந்து ஏற்றமும் தேற்றமும் அளித்த எங்கள் குடும்பத் தலைவர் எம்மை விட்டுப்பிரிந்த வேளையில் விரைந்து வந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நன்றி கூற வார்த்தைகள் இல்லாத் தவிப்புடன் இதயம் கனிந்த நன்றியை சிரம் தாழ்த்தி தெரிவித்துக்கொள்கிறோம். இறுதி நாட்களில் எம்மோடு உடனிருந்து ஆறுதல் கூறி அரவணைத்த ஒவ்வொரு நல் உள்ளங்களையும் என்றும் மறவோம். அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் பாசப் பிணைப்புடன் பிற ஊர்களிலிருந்து வருகை தந்து சிறப்பித்தவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள். கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி, ஈமெயில் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமது உள்ளம் உருகி நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் பங்குபற்றிய அனைவருக்கும் , இம் மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த சன் பிறிண்டர் அச்சகத்தாருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.


**22.08.2014** **குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"



"இறப்பு மனிதனின் பிறப்புரிமை"
"Death is the Birth Right of Every Person"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sun Printer, 66/2, Palam Road, Kandarmadam, Jaffna.